திற்கு அருகே வெள்ளாற்றில் பாலம் கட்டுவதால் 8 மைல்களும், ஆக 23 மைல்கள் சென்னையிலிருந்து நாகை செல்ல குறையும் என்ற நிலை இருப்பதால் அங்கே பாலங்கள் கட்ட அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்துவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும், மத்திய சர்க்காரை உதவி கேட்டு இருக்கிறோம். முடிவான பதில்கள் எங்களுக்கு வரவில்லை. ஆனாலும், மூல கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

தலைமைச் செயலகத்திற்கு நேரடி போக்குவரத்து வசதிகள்.

*20 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு போதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ, எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்தோ தலைமைச் செயலகத்திற்கு நேரடி பஸ் வசதி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பேருந்து வழித்தடங்கள் உரிமம்

*21 வினா திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில் தற்போதுள்ள விதிமுறைகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேருந்து வழித்தடங்கள் உரிமம் வழங்குவது பற்றிய தற்போது உள்ள விதிமுறைகளில் பயனுள்ள மாற்றங்கள் ஏதேனும் செய்யலாமா என்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, 15 மைலுக்கு கீழே வழித்தடங்களை வழங்கும்போது, பெரிய பஸ் முதலாளிகள் வைத்திய வசதிகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிற விதிமுறைகளை உடனடியாக மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அடிப்படை வசதிகள்தான் வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, அரசு இவற்றையெல்லாம் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

1970 ஆகஸ்ட் 25]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில், சாதாரண மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு லிமிடெட் கன்சர்ன் அமைத்துக் கொண்டு, பஸ் ரூட்டுக்களை வழங்கும்போது, இதற்கு பண செக்யூரிடி கொடுப்பதில், இருக்கக்கூடிய ஒருவர், குறிப்பிட்ட ஒரு நபர் கட்டினாலும் போதும் என்று இருந்தது. ஆனால், இப்பொழுது, லிமிடெட் கன்சர்ன் என்ற அந்தப் பெயரில் கட்டினால் தான் கொடுக்க முடியும் என்று ஆறு மாதமாக தடங்கள் வழங்குவது தடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது சம்பந்தமாக இப்பொழுது என்ன செய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோன்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை. மேட்டார் வெஹிகிள்ஸ் சட்டப்படி, 155-ஏ என்ற பிரிவுப்படி, சில விதிமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுகிறோம். கனம் உறுப்பினருக்கு ஏதாவது தகவல் இருந்து, தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிக்கலாம்.

Coimbatore—Bangalore Highway.

* 22 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to remodel the Coimbatore—Bangalore Highway;

(*b*) if so, the details thereof and the estimated cost;

(*c*) whether the Government have sought the help of the World Bank; and

(*d*) if so, the share of the World Bank and the State Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மைசூர் எல்லை — கிருஷ்ணகிரி — சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலையையும், சேலம், கோயம்புத்தூர், கேரள எல்லை வழியாகச் செல்லும் 47 ஆம் எண். தேசீய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடுவதற்கு வகை செய்யும் செயற்குறிப்பை இந்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(இ) தற்போதுள்ள சாலை அமைப்பை விரிவுபடுத்துதல், வலுப்படுத்துதல், வலுவற்ற, குறுகிய பாலங்களையும் சிறு பாலங்களையும் புதுப்பித்தல், தற்போதுள்ள சாலை, இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்களைக் கட்டுதல், நெரிசல் மிகுந்த நகரங்களுக்கு பக்கச்சாலைகளை அமைத்தல், சாலை அமைப்பு வடிவலியலை மேம்படுத்துதல் ஆகியவை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். 7-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 430 லட்சம் அளவிலும், 47-ஆம் எண். தேசீய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 325 லட்சம் அளவிலும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.